பாடம் 1

# எகிப்தியச் சிலைகளிலும் வல்லவர்

*விடுமுறை வேதாகமப் பள்ளியில் தேவனுடைய அன்பைக்குறித்துச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். உலகிலுள்ள கோடிக்கணக்கான மக்களில் என்னையும் தேவன் தனியே நேசிப்பாரா என்று கேத்தி தனக்குள் கேட்டுக்கொண்டாள். தேவன் உன்மேலும் அக்கறையாயிருக்கிறார் என்று நீ நினைக்கிறாயா?*

ஒரு நாள் காலைப் பொழுதில் எகிப்திய ராஜாவான பார்வோன், நைல் நதியின் அருகே தன் படை சூழ வந்தான். அப்போது மோசேயும் ஆரோனும் அவனருகே சென்றார்கள்.

'தேவனுக்கு ஆராதனை செய்ய, இஸ்ரவேல் மக்களை அனுப்பி விடு' என்று முன் சொன்னது போலவே பார்வோனிடம் கூறினார்கள். ஆனால், பார்வோன் கேட்கவில்லை. எனவே, 'நீ தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படி; இல்லையென்றால் நான், தேவன் எனக்குச் சொல்லிய படியே வாய்க்கால்கள், குளங்கள், ஏரிகள் அனைத்தின்மேலும் என் கோலை நீட்டுவேன். அப்போது நதியிலுள்ள தண்ணீர் இரத்தமாகும் என்றார். தேவன் சொன்னபடி மோசே செய்தார். எகிப்து தேசம் முழுவதிலுமுள்ள தண்ணீர் யாவும் இரத்தமானது. எகிப்தியரின் வீடுகளில் உள்ள தண்ணீரும்கூட இரத்தமாயிற்று. நதியில் மீன்கள் செத்து மிதந்தன. ஆனாலும் பார்வோன் மனம் மாறவில்லை. இதே அற்புதத்தை அவன் மந்திரவாதிகளும் செய்தனர்.

மீண்டும் பார்வோனிடம் மோசே பேசியும் பார்வோன் மறுத்தான். எனவே,தேவன் சொன்னபடியே நீர்நிலைகள் யாவின் மேலும் தன் கோலை நீட்டினார். தவளைகள் திரளாய்ப் பெருகின. எகிப்தியரின் படுக்கை, சமையல் அறைகளிலும்கூட தவளைகள்



## மனன வசனம்

**தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களைச் செய்கிறவருமாயிருக்கிறீர்; நீர் ஒருவரே தேவன்.**

**சங்கீதம் 86:10.**

தாவிக்குதித்து ஆடின. எகிப்தின் மந்திரவாதிகளும் தவளைகளைப் பிறப்பித்தனர். அந்தத் தவளைகளையெல்லாம் அகற்றும்படி ஜெபிக்குமாறு மோசேயிடம் பார்வோன் கெஞ்சினான். தேவன் தவளைகளைச் சாகடித்தார். ஆனாலும் பார்வோன் மனம்மாறவில்லை. இப்போது கர்த்தர் சொன்னபடியே, மோசே ஆரோனிடம், கோலை நீட்டி பூமியின் புழுதியின்மேல் அடிக்குமாறு சொன்னார். அதனால், எகிப்து தேசம் முழுவதும் புழுதியெல்லாம்



பேன்களாயிற்று. மந்திரவாதிகளால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அவர்கள் பார்வோனிடம், ‘‘இது தேவனின் விரல்’’ என்றார்கள். பார்வோன் மனம்மாறவில்லை.

கர்த்தர் மோசேயிடம், ‘‘பார்வோன் காலையில் நதிக்கு வரும்போது, எனக்கு ஆராதனை செய்ய ஜனங்களை அனுப்புமாறு சொல். இல்லையென்றால் எகிப்தியர்மேல் மட்டும் பலவிதமான வண்டுகள் வரும். இஸ்ரவேலருக்கு வண்டுகளால் தொந்தரவு இராது’’ என்றார். பார்வோன் கீழ்ப்படியாததால், தேசம் வண்டுகளால் சேதமானது.

எனவே, ‘எகிப்திலேயே தேவனுக்கு இஸ்ரவேலர் ஆராதனை செய்யட்டும்’ என்றான் பார்வோன். மோசே சம்மதிக்கவில்லை. பார்வோன் அனுப்ப மறுத்தான்.

எனவே, தேவனின் கட்டளைப்படி, எகிப்தியரின் மிருகங்கள் கொள்ளை நோயால் மடிந்தன.

## செய்தி

**இதயத்தைத் தொடத்தக்கதாக**
**தேவன் கிரியைசெய்கிறார்.**


இஸ்ரவேலரின் மிருகங்கள் அழியவில்லையென அறிந்தும் பார்வோன் மனம்மாறவில்லை. தேவன் எகிப்தியர், மிருகங்கள்மேல் எரிபந்தமான கொப்புளங்கள் உண்டாகச் செய்தார்.

பின்னர் தேவன், எகிப்தில் இதுவரை பெய்யாத கல்மழையையும்,பின்னர் அக்கினியோடு கூடிய கல்மழை, இடி முழக்கங்களும் உண்டாகச் செய்தார். பயிர்கள் அழிந்து நாசமாயின. பின்னர், வெட்டுக்கிளிகளால் தேவன் சேதத்தை உண்டாக்கினார். பின்னர், மூன்று நாட்கள் எகிப்தில் காரிருள் உண்டானது. ஒருவரும் இருந்த இடத்தை விட்டு எழும்பமுடியாமல் தவித்தனர். பார்வோன் மனம் மாறவே இல்லை. என் கண்ணே! பார்வோனைப் போன்ற மனக்கடினம் ஒரு போதும் நமக்கு வேண்டாம்.

*செய்முறை:* **எகிப்திலே தேவன் வாதைகளை அனுப்பினார். ஆனால் எகிப்தியக் கடவுள்களால் அந்த வாதையை நிறுத்தமுடியவில்லை. கீழே எகிப்தியக் கடவுள்களின் பெயர்கள் உள்ளன. எதிர்ப்புறத்தில் அதற்குப் பொருத்தமான படங்கள் உள்ளன. அந்தந்தக் கடவுள்களின் பெயர்களை அவற்றிற்குரிய படத்துடன் கோடிட்டு இணை.**

**ஹெக்ட் (தவளைக் கடவுள்)**





**ரா (சூரியக் கடவுள்)**

**ஹாபி (நதிக்கடவுள்)**





**செத் (தானியக் கடவுள்)**



**நட், ஷூ (ஆகாயக் கடவுள்)**



**கெப் (பூமிக் கடவுள்)**